# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2441/ 58 - 2025 ජූනි මස 21 වැනි සෙනසුරාදා - 2025.06.21**

2441/58 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பீ. 94/47 (viii) (B)

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

6(2)(ஆ) மற்றும் 21(2)(ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2)(ஆ) என்னும் பிரிவாலும் மற்றும் 21(2)(ஆ) என்னும் பிரிவாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரான அநுர கருணாதிலக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம். -

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட "திக்வெல்ல தீகவலுகாராம ரஹமஹா விகாரை" என அழைக்கப்படும் காணி இடப்பரப்பானது மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன். அத்துடன்

(ஆ) நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக மேலே வெளிப்படுத்தப்பட்டதான திக்வெல்ல தீகவலுகாராம ரஜமஹா விகாரைக்கான பௌதிக உருவரை வரைபட திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமெனப் பணிக்கின்றேன்.

**அநுர கருணாதிலக்க,**
நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
2025, யூன் 12.


1A - G44604 - 09 (2025/06)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை

### திக்வெல்ல தீகவலுகாராம ரஜமஹா விகாரை இடப்பரப்பினைக் கொண்ட பிரதேசம்

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, இல. 451சீ, பதீகம கிழக்கு கிராம அலுவலர் பிரிவினுள், பதீகம எனும் கிராமத்தில் அமைந்துள்ள, விஹாரஹேன என அழைக்கப்படும் காணியின் நில அளவையாளர் தலைமையதிபதியின் 2023, செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதியைக் கொண்ட சுவட்டுத்திட்ட இலக்கம் MA/DKW/2022/63 என்பதில் குறித்துக் காட்டப்பட்டுள்ளவாறான காணித் துண்டு இல. எனக் குறித்துக் காட்டப்பட்டுள்ளவாறான எல்லாக் காணித்துண்டுகளும் 1.3713 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள காணிகளின் சொல்லப்பட்ட துண்டுகளும் மற்றும் அதன் எல்லைகளும் பின்வருமாறு :

**துண்டு இல. 1 - விஸ்தீரணம் - 1.3713 ஹெக்டயார் (3 - ஏ, 1 - றூ, 22.2 - பே)**

வடக்கு: எஸ். எஸ். டி. பிரீதிகா உரிமை கோரும் கிம்புல்கெஹேன, எச். ஏ. டீ. சந்திராணி உரிமை கோரும் தெனிய, டி. சொமிபால உரிமை கோரும் தெனிய, வதுஹேவாகே பொடிஞ்ஞோ மற்றும் ஏனையோர் பலர் உரிமை கோரும் பிம்பிரிகஹவத்த மற்றும் கே. சஞ்ஜய வஜிததேவ உரிமை கோரும் தெனிய ; கிழக்கு : வதுஹேவாகே பொடிஞ்ஞோ மற்றும் மேலும் பலர் உரிமை கோரும் பிம்பிரிகஹவத்த மற்றும் கே. சஞ்ஜய வஜிததேவ உரிமை கோரும் தெனிய மற்றும் வீதி (பிரதேச சபை) ; தெற்கு : வீதி (பிரதேச சபை) ; மேற்கு : கமல் ராஜபக்ஷ உரிமை கோரும் கிம்புல்கெஹேன, சுசிலா ராஜபக்ஷ உரிமை கோரும் கிம்புல்கெஹேன மற்றும் எஸ். எஸ். டி. பிரீதிகா உரிமை கோரும் கிம்புல்கெஹேன, எச். ஏ. டி. சந்திராணி உரிமை கோரும் தெனிய மற்றும் டி. சொமிபால உரிமை கோரும் தெனிய.

EOG 06 - 0195